# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.</u>

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ே◌உறமனாதன் | அசல் வழக்கு எண். | 51/2015 |
| த/பெ. | - | மூர்த்தி | வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

<u>25.10.2025.</u>

## <u>முதல் விசாரணை:</u>

நான் எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் சொன்னத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். 27.07.1989 தேதியிட்ட கந்தசாமி கவுண்டர் என்பவர் எனது அப்பாவான 1 ம் வாதி மற்றும் என் பெரியப்பா சந்திரவேல் ஆகியோர்களுக்கு எழுதி வைத்த உயில் சாசனம் அசல் மற்றும் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (**வா.சா.ஆ.13 ஆவணத்தின் பயனாளிகள் மூலம் குறியீடு செய்யப்படாததால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை சொல்லப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)

பிரதிவாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.